தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா.4 நாள் 04.11.2025

| SC. No. | 37/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | மோகன்தாஸ் | த/பெ. | ஜெயராமன் |
| வயது | 37 | தொழில் | விவசாயம் |
| கிராமம் | வைத்தியநாதபுரம் | தாலுக்கா | சீர்காழி |

**( எதிரிகள் ஆஜர்,).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது வைத்தியநாதபுரம், கொண்டத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் மற்றும் ஆஜர் எதிரிகளை தெரியும். அனைவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். கடந்த 2024ம் வருடம் அம்பேத்கர் பிறந்தநாளை ஒட்டி வைத்திருந்த பேனரை யாரோ கிழித்துவிட்டார்கள் என இருதரப்பினருக்கும் பிரச்சினை ஏற்பட்டது என கேள்விபட்டேன். எனக்கு எந்த விபரமும் நேரடியாக தெரியாது. என்னை போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சி எனக்கூறி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-

கடந்த 20.04.2024 அன்று இரவு 7.45 மணியளவில் ரவி வீட்டிற்கு முன்பு எங்கள் தெருவைச்சேர்ந்த ரெங்கநாதன், விஜய், சஞ்சய், விஜய் த/பெ. பன்னீர்செல்வம், பிரகாஷ், தமிழ், மாதவன், விஸ்வநாதன் , ராஜேஷ் மற்றும் குபேந்திரன் ஆகியோர்கள் கூட்டமாக நின்றுக்கொண்டு தெருவில் உள்ள பொது வாட்டர் டேங்கில் எங்கள் தெருவைச்சேர்ந்தவர்கள் துணி துவைத்தால் உங்களுக்கு என்னடா என்று அபாசமான வார்த்தைகளால் பேசி கூச்சலிட்டார்கள் என்றால் சரியல்ல. நானும், ரவியும், ராஜேந்திரன்,

J. Mohandas

CJM, MAYILADUTHURAI.

செல்வமுருகன் மற்றும் தெருவில் உள்ளவர்கள் மேற்படி நபர்கள் பார்த்து இங்கு வந்து ஏன் சத்தம்போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் அசிங்கமான திட்டி, கையில் வைத்திருந்த சறுக்கு பாட்டிலை என்மீது தூக்கி வீசினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகள் கையில் வைத்திருந்த கருங்கல்லை ரவி வீட்டு மீதும், எங்கள் மீதும் அடித்தார்கள் என்றும், மேலும் கையில் வைத்திருந்த கட்டை கழியால் எங்களை தாக்கினார்கள் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தபோது எதிரிகள் அசிங்கமாக திட்டி, பாட்டில் மற்றும் கருங்கல்லால் தாக்கியதையும், கட்டை கழியால் தாக்கியதையும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் ஊர்க்காரர்கள் என்பதால் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு ஆதரவாக தற்போது உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

இல்லை என முறையீடு செய்யப்பட்டது.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

J. Mohandoss.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா.5 நாள் 04.11.2025

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 37/2025 | | |
| பெயர் | அருண்ராஜ் | த/பெ. | ரவிசங்கிரன் |
| வயது | 29 | தொழில் | |
| கிராமம் | வைத்தியநாதபுரம் | தாலுக்கா | சீர்காழி |

**( எதிரிகள் ஆஜர்,).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது வைத்தியநாதபுரம், கொண்டத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையதுஅல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சி எனக்கூறி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-

கடந்த 21.04.2024 அன்று காலை 6.00 மணியளவில் வைத்தியநாதபுரம் மெயின்ரோட்டில் உள்ள ரவி வீட்டிற்கு அருகில் நானும், அய்யாப்பிள்ளை என்பவரும் நின்றுக்கொண்டிருந்தபோது வைத்தீஸ்வரன் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அம்பேத்கர் பேனர் கிழிந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு எங்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகசரில் நானும், அய்யாப்பிள்ளை என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைடம் வரைந்தபோது உடனிருந்து அதில் சாட்சியாக இருந்து கையொப்பமிட்டுவிட்டு தற்போது

CJM, MAYILADUTHURAI. R. Arunraj

அந்த உண்மையை மறைத்தும், போலீசார் விசாரிக்கவில்லை என்று எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

இல்லை என முறையீடு செய்யப்பட்டது.

மறு விசாரணை :-

இல்லை.

R. Anij

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

21/11/20

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.